14 தினகரன்
சென்னை 27 ஜூன் 2009

## ஆய்வில் தகவல்

# போதை பொருளால் தற்கொலை அதிகரிப்பு

சென்னை, ஜூன் 27: உலக போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு போரூர் ராமச்சந்திரா பல்கலைக்கழகம் சார்பில் சிறப்பு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. பல்கலைக்கழக துணைவேந்தர் ரங்கசாமி தலைமை வகித்தார். பல்துறை தலைவர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். மனநலத்துறை தலைவர் பொன்னுதுரை பேசுகையில், "போதை பொருள் பயன்படுத்துவோரும், அவர்களின் குடும்பங்களிலும் தற்கொலை சம்பவங்கள் அதிகமாக நடக்கின்றன என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதே போல குட்கா, ஜர்தா போன்றவற்றை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது என்றார்.

கீழப்பாக்கம் மனநலத் துறை முன்னாள் கண்காணிப்பாளர் சோமசுந்தரம், முன்னாள் இயக்குனர் வி.எஸ்.பி.பாஷியம் உட்பட பலர் கலந்து கொண்டனர். போதை பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகள் எந்த அளவு பயன் அளிக்கிறது என்பது குறித்து மாணவர்களின் பட்டிமன்றமும் நடைபெற்றது.